## வர்த்தகம் மூலதனம்

ஜே.ஜே

### அமெரிக்க வகை ரொயோற்றா மகிழூர்தி விற்பனை நிறுத்தம்

இரண்டு வாரங்களிற்கு முன்னர் வேக வளர்ச்சி அழுத்தி தவறு காரணமாக 2.3 மில்லியன் மகிழூர்திகளைத் திரும்பப் பெற்ற ரொயோற்றா நிறுவனம், தனது 8 அமெரிக்க உற்பத்திகளின் விற்பனையை இடைநிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது. அத்துடன் பெப்ரவரி மாதத்தில் இருந்து அமெரிக்காவின் உற்பத்திகள் சிலவற்றையும் தற்காலிகமாக இடைநிறுத்தப்போவதாகவும், சரிபார்க்கும் பணி முடிவடையும்வரை இத்தற்காலிக




நடவடிக்கை இன்றியமையாதது என்றும் கூறியுள்ளது. அழுத்தி கால்விரிப்பிற்குள்சென்று சிக்குவதாகக் கூறி கடந்த ஒக்ரோபர் மாதம் 4.2 மில்லியன் மகிழூர்திகளை அமெரிக்கா திரும்பப் பெற்றிருந்தது. கம்றி, ரண்ட்னா 2007 –2010 அவலோன் 2005–2010, ஹைலாண்டா 2010, செக்கு ஓலியா –2008 –2010 சுயஎய, கொனோலா, மற்றிக்ஸ் 2009 – 2010 ஆகிய உற்பத்திகளே தற்காலிக விற்பனை நிறுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன. இவ்வறிவித்தல் வெளியாகியதைத் தொடர்ந்து, ஜப்பானில் ரொயற்றோவின் பங்கு 4.3 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. பிரபல்யம் வாய்ந்த எட்டு உற்பத்திகளின் தற்காலிக விற்பனை இடைநிறுத்தம் ரொயோற்றாவிற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள நிலையில் இது ஐரோப்பாவிற்கும் பரவியுள்ளது.

### உலக பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படும்

உலக பொருளாதார நிலையில் சிறிய மாற்றம் ஏற்படும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இவ்வாண்டு 3.1 வீதம் வளர்ச்சியே காணப்படும் என்று கடந்த ஒக்ரோபர் மாதம் சுட்டிக்காட்டியிருந்த சர்வதேச நாணய நிதியம் தற்போது 3.9 வீதம் ஆகவே வளர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளது. சீனாவே இந்நிலைக்குக் காரணம் என்றும், சில முக்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மந்தநிலையிலேயே காணப்படும் என்பதனையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை. முன்னைய கணிப்பைவிட பொருளாதார வளர்ச்சி சற்று ஸ்திரமாகவே தற்போது காணப்படுவதுடன், இதன்வேகம் பிராந்திய ரீதியாக வேறுபட்டுள்ளது. பிரித்தானியா கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் தற்போதைய பொருளாதார சிக்கலில் இருந்து விடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளதுடன், பலவீனம் என்ற நிலையில் இருந்து 0.1 வீதம் வளர்ச்சி என்ற நிலையை அடைந்துள்ளது. அதே சமயம் இவ்வாண்டு 0.9 வீதம் ஆக பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் என்று கடந்த ஒக்ரோபர் மாதம் தெரிவித்த சர்வதேச நாணய நிதியம் தற்போது வளர்ச்சி விகிதம் 1.3 வீதமாக அமையும் என்று கூறுகின்றது. அதேபோல யூரோ நாணயத்தை பயன்படுத்தும் பதினாறு ஐரோப்பிய நாடுகளின்



பொருளாதார வளர்ச்சி ஒரு சதவிகிதமாக அமையும் என்றும், இது முன்னைய கணிப்பீட்டைவிட 0.7 விகிதம் அதிகமாகும். அரசாங்கங்களின் ஊக்குவிப்பே மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தவல்லது என்றும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. 2009ம் ஆண்டு உலகில் 27 மில்லியன் மக்கள் தமது தொழிலினை இழந்துள்ளனர் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளதுடன் இக் காலப்பகுதியில் 212 மில்லியன் மக்கள் தொழிலற்றவர்களாக காணப்பட்டுள்ள நிலையானது இவ்வாண்டு 213 மில்லியனாக மாற்றங்காணும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# பாலா இந்தியாவின் சிறந்த இயக்குநர்

## நான் கடவுள் படத்திற்கு இரு விருதுகள்

## கடவுளுக்கு நன்றி சொல்ல பாலா மறுப்பு



இந்தியாவின் திரைப்படங்களுக்கான தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 2008ம் ஆண்டுக்கான 56வது தேசிய திரைப்பட விருதுகளை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அம்பிகா சோனி டில்லியில் அறிவித்தார். மொத்தம் 126 திரைப்படங்கள் தேசிய விருதுகளுக்காகப் போட்டி போட்டன. இதில் தமிழில் நான் கடவுள் படத்தின் இயக்குநர் பாலா சிறந்த தேசிய இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டார். நான் கடவுள் படம் மொத்தம் 2 விருதுகளைத் தட்டியுள்ளது. தமிழுக்கு மொத்தம் 3 விருதுகள் கிடைத்துள்ளன.



*சிறந்த இயக்குநர் - பாலா (நான் கடவுள்)*
*சிறந்த ஒப்பனை கலைஞர் - மூர்த்தி (நான் கடவுள்)*
*சிறந்த தமிழ்ப் படம் - வாரணம் ஆயிரம்*
*சிறந்த படம் - அந்தாஹீன் (பெங்காலி)*
*சிறந்த நடிகர் - உபேந்திரா லிமாயி (ஜோகுவா மராத்திப் படம்)*
*சிறந்த நடிகை - பிரியங்கா சோப்ரா (பசன்)*
*சிறந்த ஒளிப்பதிவு - அந்தாஹீன்*
*சிறந்த பாடல்கள் - அந்தாஹீன்*
*சிறந்த பாடகர் - ஹரிகரன் (ஜோக்வா)*
*சிறந்த பாடகி - ரேயா கோசல் (அந்தாஹீன், ஜோக்வா)*
*சிறந்த இசை - (ஜோக்வா)*

தேசிய விருது கிடைத்தது பற்றி இயக்குநர் பாலா நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது...

*கேள்வி:- தேசிய விருது கிடைத்ததை எப்படி உணர்கிறீர்கள்?*
பதில்:– என்னை விட பெரிய இயக்குநர்கள் மணிரத்னம், பாலுமகேந்திரா, பாரதிராஜா, கே.பாலசந்தர் போன்றவர்கள் தமிழ் திரையுலகில் இருக்கிறார்கள். தேசிய விருது எனக்கு கிடைத்திருப்பது கொஞ்சம் கூச்சமாகவும் இருக்கிறது. பெருமையாகவும் இருக்கிறது. இறக்கை கட்டி பறப்பது போல் இருக்கிறது. ஆனால் என்னை விட அதிக சந்தோசப்படுபவர்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள். ஒருவர், என் குரு பாலுமகேந்திரா. இன்னொருவர், அகிலா அம்மா (பாலுமகேந்திராவின் மனைவி.) அந்த வீட்டின் செல்லப்பிள்ளை நான். மூத்த மகன் நான்தான். அங்கேயே சாப்பிட்டு, அங்கேயே வளர்ந்தவன். அந்த வீட்டில் மனதுக்குள் திருவிழா மாதிரி கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை சந்தோசப்படுத்தியதை பெரிய விருதாக கருதுகிறேன். என் தாய்–தந்தையை சந்தோசப்படுத்தியது போல் உணர்கிறேன். இந்த விருதை அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். என் கடமையை செய்துவிட்ட மாதிரி நினைக்கிறேன்.

*கேள்வி:- 'நான் கடவுள்' படம் எடுத்தபோது, தேசிய விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?*
பதில்:– எனக்கு விருது கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் படம் எடுக்கவில்லை. என்னை நம்பி வந்த நடிகர்–நடிகைகளுக்கு, தொழில்நுட்ப கலைஞர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது. அவர்களுக்கு விருது கிடைக்கவில்லையே என்ற சின்ன வருத்தம் எனக்கு இருக்கிறது. என்னை விட அவர்கள்தான் இந்த படத்தின்போது வெயிலிலும், மழையிலும் கஷ்டப்பட்டார்கள். பூஜா முகம் முழுக்க கறுப்பு மை பூசி, கண்களில் லென்சுடன் நடித்து கஷ்டப்பட்டார்.



*கேள்வி:- அசாதரணமான ஆட்களை கதாபாத்திரங்களாக்கி தொடர்ந்து படம் எடுக்கிறீர்களே, ஏன்?*
பதில்:– இனிமேல் அப்படி படம் எடுக்கக்கூடாது. இனி நீ இருட்டு ஏரியாவுக்குள் போகக்கூடாது என்று இளையராஜாவும், பாலுமகேந்திராவும் என்னிடம் சத்தியமே வாங்கியிருக்கிறார்கள். அதுபோன்ற படங்களை இனிமேல் இயக்க மாட்டேன். இனிமேல் நான் இயக்கும் படங்கள், சராசரி மனிதர்களை பற்றியதாக இருக்கும்.

*கேள்வி:- தேசிய விருது பெற்றதற்காக நீங்கள், கடவுளுக்கு நன்றி தெரிவித்தீர்களா?*
பதில்:– 'நான் கடவுள்' படத்தில் கடவுளா வந்து நடித்தார்? கடவுளா வந்து மேக்கப் போட்டார்? கடவுளா வந்து உடையலங்காரம் செய்தார்? கடவுளா வந்து காமராவை இயக்கினார். கஷ்டப்பட்டு நடித்தவர்கள் நடிகர், நடிகைகள். கஷ்டப்பட்டு உழைத்தவர்கள், தொழிலாளர்கள். இல்லாத ஒருவருக்கு நான் ஏன் நன்றி சொல்ல வேண்டும்?